## தருமபுரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,

பிறப்பிப்பவர் : திருகு. குணசேகரன், எம்.எஸ்.ஸி.,எம்.எட்.,எம்.பில்.,

மூ.மு.எண்.2733/அ1/2023 நாள் 24.07.2023

பொருள் நிருவாகம் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பணிவரன்முறை – திரு. வெ. வினோத்குமார், இளநிலை உதவியாளர், அரசு உயர்நிலைப் பள்ளி, இலட்சுமாபுரம், தருமபுரி மாவட்டம் – இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்ந்து.

பார்வை
1. சென்னை 3, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக்குழு செயலாளரின் கடிதம்.எண்.2563/PSD-I2/2020 நாள் 21.07.2020.
2. தருமபுரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல் முறைகள், ந.க.எண். 3655/அ1/2020 நாள் 17.09.2020.
3. உதவி இயக்குநர், அரசுத்தேர்வுகள் இயக்ககம், கடிதம் நாள் 08.10.2020
4. தலைமை ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, இலட்சுமாபுரம் கடிதம் ந.க.எண்.111/23-24 நாள் 11.05.2023.
5. சம்மந்தப்பட்ட பணியாளரின் விண்ணப்பம் மற்றும் பணிப்பதிவேடு.

= = =

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக்குழு தொகுதி-IV – இன் மூலம் தேர்வு செய்யப்பட்டு, தருமபுரி மாவட்டம், இலட்சுமாபுரம், அரசு உயர்நிலைப்பள்ளியில் பணிபுரிந்து வரும் திரு. வெ. வினோத்குமார், என்பவருக்கு பார்வை (2) ல் காணும் செயல்முறைகள் வாயிலாக இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டதையடுத்து தனியர் 23.09.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

பார்வை (3) இல் காணும் அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநரின் கடிதத்தில், தனியரின் பள்ளி இடைநிலை மற்றும் மேல்நிலை கல்விச்சான்றிதழ்கள் உண்மைத்தன்மை வாய்ந்தவை என அறிக்கை பெறப்பட்டுள்ளது. கல்விச்சான்றுகள் உண்மைத்தன்மை வாய்ந்தவை என பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையிலும், இப்பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் கீழ்க்கண்டவாறு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| தேர்வாணையப் பட்டியலின் வரிசை என் | பெயர் / பதவி மற்றும் பணிபுரியும் பள்ளி | நியமன முறை | கல்வித் தகுதி | இளநிலை உதவியாளர் பதவியில் நியமன நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 103 | வெ வினோத்குமார், இளநிலை உதவியாளர், அரசு உயர்நிலைப்பள்ளி, இலட்சுமாபுரம், தருமபுரி மாவட்டம் | தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் | SSLC HSC தேர்ச்சி | 23.09.2020 முற்பகல் | 23.09.2020 முற்பகல் |

1. இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர் மூன்றாண்டு பணிக்காலத்திற்குள் இரண்டாண்டுகள் பூர்த்தி செய்த பின்னரே இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்படும்.

2. உயர்நிலைப் பள்ளிப் படிப்பில் தமிழை மொழிப்பாடமாகவோ அல்லது கற்பிப்பு மொழியாகவோ பயிலாமல் இருப்பின் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் குழுமத்தால் நடத்தப்படும் தமிழ் இரண்டாம் நிலைத்தேர்வில் பணிவரன்முறை செய்த நாளிலிருந்து இரண்டாண்டிற்குள் தேர்ச்சி பெற வேண்டும்.

3. இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் வழங்க இயலும்.

4. தகுதிகாண் பருவ காலத்தில் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வினையும், அரசு அலுவலருக்கான அடிப்படைப்பயிற்சி (பவானிசாகர்) முடித்தல் வேண்டும்.

4-7-23

முதன்மைக் கல்வி அலுவலர்,

தருமபுரி.

24/7/23

பெறுதல் - திரு. வெ. வினோத்குமார், இளநிலை உதவியாளர், அரசு உயர்நிலைப்பள்ளி, இலட்சுமாபுரம்.

(உரிய வழியில்)

நகல் - தலைமை ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, இலட்சுமாபுரம்

Attested

/12/23

அரசு உயர்நிலைப் பள்ளி

இலட்சுமாபுரம்.